# Yarl IT Hub's
# Digital Content Creators(DCC) Accelerator
# FAQs-தமிழ்

1st Cohort

**டிஜிட்டல் உள்ளடக்க படைப்பாளி( Digital Content creators) என்பவர் யார்?**

டிஜிட்டல் உள்ளடக்க படைப்பாளி என்பவர் பொழுதுபோக்கு அல்லது கல்வி நோக்கத்திற்காக உள்ளடக்கங்களை உருவாக்கி ஒரு டிஜிட்டல் ஊடகத்தின் மூலம் பயனாளர்கள்/பார்வையாளர்களுக்கு தமது கருத்துகளை /படைப்புக்களை கொண்டு சேர்ப்பவர்கள் ஆவர்.அப்படைப்புகள் வலைப்பதிவுகள், செய்திகள், படம், வீடியோ, ஒலிக்குறிப்புக்கள் , மின்னஞ்சல், சமூகப் புதுப்பிப்புகள் அல்லது பிற வடிவங்களாக பகிரப்படலாம்.

**DCC விரைவுபடுத்தல்( Digital content creator Accelerator program) செயற்றிட்டம் என்றால் என்ன?**

DCC விரைவுபடுத்தல் செயற்றிட்டம் என்பது வளர்ந்து வரும் படைப்பாளர்கள் /டிஜிட்டல் படைப்பாளிகளுக்கு அவர்களின் யோசனைகள் மற்றும் படைப்பாற்றலை உயிர்ப்பிக்க மற்றும் அவர்களுக்கு பொருளாதார வாய்ப்புகளை உருவாக்க தேவையான ஆலோசனைகள் மற்றும் உதவிகளை மட்டுப்படுத்தப்பட்ட சில மாத காலத்துள்(3 மாதங்கள்) வழங்கும் ஒரு செயற்றிட்டம் ஆகும் .படைப்பாளிகளை படைப்பாளி பொருளாதாரத்தை (Creator economy) உருவாக்கவும் வழிவகை செய்யும்.

**இந்த செயற்றிட்டம் யாருக்கானது ?**

படைப்பாக்கங்களில் ஆர்வம் உள்ளவர்கள் அல்லது படைப்பாளிகளாக இருப்பவர்கள் இந்த செயற்றிட்டத்தில் பங்குகொண்டு பயனடையலாம்.

**இந்த செயற்றிட்டத்தில் பங்கேற்பாளராக இருப்பதற்கு தற்பொழுது படைப்பாளியாக இருக்க வேண்டுமா ?**

இல்லை.படைப்பாக்கங்களில் ஆர்வம் உள்ள எவரும் இந்த செயற்றிட்டத்தில் பங்கேற்கலாம்.

**இச் செயற்றிட்டத்தின் பங்கேற்பாபாளர்களிடம் எதிர்பார்க்கப்படுபவை? (Expected commitments )**

தேர்வு செயப்படுபவர்களிடம் இருந்து கீழ் வரும் அமர்வுகளில் பங்குபற்றுதல் எதிர்பார்க்கப்படுகிறது.

- அறிமுக செயலமர்வுகளில் பங்கேற்பு(An onboarding session )
- சக பங்கேற்பாபாளர்களுடன் அறிவுப்பகிர்வு/அனுபவப் பகிர்வுகள்(Meet & greet opportunities with fellow creators)
- செயற்றிட்டகுழுவுடன் ஒவ்வொரு வாரமும் அவ்வாரதிற்கான செயற்பாடுகளை பகிரும் மெய்நிகர் கூட்டம்(Weekly programming and update meetings with the DCC Accelerator Management team)
- இருவாரங்களுக்கு ஒருமுறை வழிகாட்டுதல் செயலமர்வுகள்(Fortnight mentoring session with assigned mentors)

**இச் செயற்றிட்டத்தின் பங்கேற்பாளர்கள் பெறும் நன்மைகள்?**

- வாராந்த வழிகாட்டுதல்(Weekly monitoring)
- படைப்பாக்கத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களிடம் இருந்து வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் (Mentoring from expert creators and Creator Managers)
- வலையமைப்பாக்கம் (Networking with recognized digital content creators and experts)

**இச் செயற்றிட்டத்திற்கு எத்தனை பங்கேற்பாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்?**

விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் தேவைகேற்ப பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை மாறுபடலாம்.

**ஒன்றுக்கு மேற்பட்ட முறை இச் செயற்றிட்டத்திற்கு விண்ணப்பிக்கலாமா?**

இச் செயற்றிட்டத்தின் முதலாவது அணி இதுவாகும்.இதன் பின்னர் ஒரு அணிக்கு தேர்வு செய்யப்பட்ட படைப்பாளர்கள் மீண்டும் விண்ணப்பிக்க முடியாது.

**விண்ணப்பதாரர்கள் எவ்வகையான அளவுகோல்களின் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்?**

இந்த வலைப்பக்கத்தில் இருக்கும் விண்ணப்பபடிவத்தின் மூலம் படைப்பாளிகள் விண்ணப்பிக்கலாம்.

படைப்பாளிகள் நான்கு முக்கிய பகுதிகளை கருத்திற்கொண்டு தேர்வு செய்யப்படுவார்கள்( தேர்வு இப்பகுதிகளுடன் மட்டுப்படுத்தப் படமாட்டாது)

**படைப்பாற்றல்**: உள்ளடக்கத்தை உருவாக்குவதற்கும் அதன் மூலம் பார்வையாளர்/பயனர் சமூகத்தை உருவாக்குவதற்கும் சொந்தமான ஒரு தூர நோக்கு அவர்களிடம் இருக்க வேண்டும். பயனுள்ள, தரமான முறையில் பிற ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான திறன்/ஆர்வத்தினை அவர்கள் வெளிப்படுத்துகிறார்களா?

**ஆர்வம்:** படைப்பாளி தனித்துவமாக தனது திறமையினை ஒரு தொழில் முயற்சியாகவோ அல்லது சமூகத்தில் ஒரு விடயத்தை பகிர்வதன் மூலம் மாற்றத்தை ஏற்படுத்த ஆர்வம் காட்டுகிறார்களா?

**அர்ப்பணிப்பு**: படைப்பாளியிடம் உள்ளடக்கத்தை உயிர்ப்பிப்பதற்கான சிந்தனை மற்றும் குறிப்பிட்ட திட்டம் உள்ளதா?

**தாக்கம்:** படைப்பாளிகள் இந்த விரைவுபடுத்தல் செயற்றிட்டத்தின் பண்ணிக்கூற்று மற்றும் செயற்றிடத்தின் பின்னும் தமது படைப்புக்களினால் நேர்மறை தாக்கத்தை உருவாக்க மற்றும் தொழில் முயற்சி ஒன்றை உருவாக்குவதை இலக்காக கொண்டுள்ளார்களா?

இந்த வழிகாட்டுதல் புத்தகத்தில் குறிப்பிடப்படாத வேறு கேள்விகள் அல்லது விளக்கங்கள் தேவைப்படின் எம்மைத் தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு

**மின்னஞ்சல் :event@yarlithub.org      தொலைபேசி' (+94)76 767 3158**